ஆகஸ்ட் – 03

# TNPSC துளிகள்

- உயர் கல்வி நிறுவனங்களுக்காக நாட்டின் முதலாவது மாநில அளவிலான அங்கீகார ஆணையமான மாநில மதிப்பீடு மற்றும் அங்கீகார மையமானது (State Assessment and Accreditation Centre - SAAC) கேரளாவில் செயல்படத் தொடங்கியுள்ளது.
    - அங்கீகாரத்திற்காக மாநிலம் சார்ந்த 3 குறிப்பிட்ட அளவுருக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன: அனைவரையும் உள்ளடக்கிய சமூகம், சமபங்கு உடைய, சிறப்பு வாய்ந்த மற்றும் அறிவியல் சார்ந்த மனநிலை & மதச் சார்பற்ற பார்வை ஆகியவற்றை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள்.
- நாட்டில் இதே வகையைச் சேர்ந்த முதன்முறையாக அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்ற பின்பு விலங்குகளில் மனித உறுப்புகளை வளர்ப்பதற்கான ஆய்வைத் தொடங்க ஜப்பானைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர்.
    - இவர்கள் அயல் சதையொட்டு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவிருக்கின்றனர். அயல் சதையொட்டு அல்லது ஹெட்ரோலோகஸ் உறுப்பு மாற்று என்பது உயிரணுக்கள், திசுக்கள் அல்லது உறுப்புகளை ஒரு இனத்திலிருந்து மற்றொரு இனத்திற்கு மாற்றுவதாகும்.
- கிரிராஜ் பிரசாத் குப்தா என்பவர் பொது கணக்குத் தணிக்கையாளராக (Controller General of Accounts - CGA) நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.
- 23 வயதான இந்திய வம்சாவளி மருத்துவரான பாஷா முகர்ஜி என்பவருக்கு 2019 ஆம் ஆண்டின் மிஸ் இங்கிலாந்து என்ற பட்டம் சூட்டப்பட்டது.
- மகாத்மா காந்தியின் 150-வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக காம்பியாவில் உள்ள எபுன்ஜன் அரங்கில் மகாத்மா காந்தி மற்றும் காதி குறித்த கண்காட்சியை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தார்.

# தேசியச் செய்திகள்

## இந்திய மருத்துவ ஆணையம் (திருத்த) மசோதா, 2019

- இந்திய மருத்துவ ஆணையம் (திருத்த) மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.
- இது இந்திய மருத்துவ ஆணையச் சட்டம், 1956ஐ மாற்றுகின்றது.
- இந்த மசோதாவானது தேசிய மருத்துவ ஆணையத்தை (National Medical Commission - NMC) அமைக்க வழி செய்கின்றது. இந்த ஆணையமானது இந்திய மருத்துவக் கழகத்தை (Medical Council of India - MCI) மாற்றவிருக்கின்றது.
- இது மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட 25 உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.
- இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், மாநில அளவில் மாநில அரசுகள் மாநில மருத்துவ ஆணையங்களை அமைக்க வேண்டும்.
- மத்திய அரசு ஒரு மருத்துவ ஆலோசக ஆணையத்தை (Medical Advisory Council - MAC) அமைக்கும்.
- மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள், தங்களது சிந்தனைகளை MAC மூலமாக NMCயின் முன் வைக்க முடியும்.

- MAC ஆனது மருத்துவக் கல்வியின் "குறைந்தபட்ச தரங்களை" தீர்மானிப்பது மற்றும் பராமரிப்பது குறித்த ஆலோசனைகளை NMCவிற்கு வழங்கும்.
- மருத்துவப் பணியை மேற்கொள்வதற்கு நவீன மருத்துவத் தொழிலுடன் தொடர்புடைய சில இடைநிலைப் பயிற்சியாளர்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட உரிமத்தை NMC வழங்கும்.
- இந்த மசோதாவின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட அனைத்து மருத்துவ நிறுவனங்களிலும் இளநிலை மற்றும் முதுநிலை பல்நோக்கு மருத்துவக் கல்விக்கான சேர்க்கைக்கு ஒரே மாதிரியான தேசியத் தகுதி நுழைவுத் தேர்வு ஒன்று இருக்கும்.
- மருத்துவராக பணியாற்றுவதற்கான உரிமத்தைப் பெறுவதற்காக மருத்துவ நிறுவனங்களிலிருந்துப் பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்கு நெக்ஸ்ட் தேர்வு (தேசிய எக்ஸிட் தேர்வு) என்ற பொது இறுதி ஆண்டு இளநிலைத் தேர்வு ஒன்று இருக்கும்.
- இந்த மசோதாவின்படி இந்தத் தேர்வின் மதிப்பெண் ஆனது மருத்துவ நிறுவனங்களில் மாணவர்கள் முதுநிலைப் படிப்புகளில் சேருவதற்கு அடிப்படையாக இருக்கும்.

## பஷ்மினா (காஷ்மீர் கம்பளி) பரிசோதனை மையம்

- லேஹ் நகரத்தில் ஒரு பஷ்மினா பரிசோதனை மையம் அமைக்கப்படவிருப்பதாக இந்தியத் தரங்கள் அமைப்பு (BIS - Bureau of Indian Standards) அறிவித்துள்ளது.
- இது சேகரிக்கப்பட்ட பஷ்மினாவின் தரத்தைப் பரிசோதிப்பதற்காக லேஹ் நகரத்தில் உள்ள லடாக் தன்னாட்சி மலை வளர்ச்சி ஆணைய ஆய்வகத்துடன் இணைந்து அமைக்கப்படவிருக்கின்றது.
- பஷ்மினா என்பது காஷ்மீர் ஆடுகளின் தனித்துவமான 4 இனங்களிலிருந்து வரும் காஷ்மீர் கம்பளியின் ஒரு சிறந்த வகையாகும்.

| | |
|---|---|
| Changthangi | Malra |
| Chegu | Chyangara |

## இந்தியாவின் முதலாவது நேர மேலாண்மை ஆய்வு

- மத்திய நிதி அமைசக்கத்தின் வருவாய்த் துறையானது இந்தியாவின் முதலாவது நேர மேலாண்மை ஆய்வை (Time Release Study - TRS) நடத்திக் கொண்டிருக்கின்றது.
- இது வணிகர்களுக்குப் பயனளிப்பதற்காக எல்லையில் சரக்குப் போக்குவரத்தை வேகப்படுத்துவதற்காக நடத்தப்படவிருக்கின்றது.
- இது ஆகஸ்ட் 01 முதல் ஆகஸ்ட் 07 வரையிலான காலகட்டத்தில் கடல், வான், நிலம் மற்றும் உள்நாட்டுத் துறைமுகம் உள்ளிட்ட 15 துறைமுகங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்படவிருக்கின்றது.
- குறிக்கோள் : வர்த்தகப் போக்குவரத்தில் உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து, அவற்றை நிவர்த்தி செய்வதாகும். மேலும் இது எல்லை நடைமுறைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான அதனுடன் தொடர்புடைய கொள்கை மற்றும்


செயல்பாட்டு நடவடிக்கைகளை எடுப்பதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

- TRS என்பது சர்வதேச வர்த்தகப் போக்குவரத்தின் திறனை அளவிடுவதற்காக உலக சுங்க அமைப்பினால் ஆதரிக்கப்பட்டு சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கூறாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியப் பொருளாதார வீழ்ச்சி – 5வது இடத்திலிருந்து 7வது இடம்

- உலக வங்கியினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட தரவின் படி, 2018 ஆம் ஆண்டின் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவரிசையில் இந்தியா 7வது இடத்திற்குச் சென்றுள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் தரவின்படி, உலக GDP தரவரிசையில் ஐக்கிய இராஜ்ஜியம் 5வது இடத்தையும் பிரான்சு 6வது இடத்தையும் மீண்டும் பிடித்து இந்தியாவை முந்தியுள்ளன.
- இந்தத் தரவரிசைப் பட்டியலில் 20.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற GDP மதிப்புடன் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து இந்தப் பட்டியலில் 13.6 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற GDP மதிப்புடன் சீனா 2-வது இடத்தையும் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற GDP மதிப்புடன் ஜப்பான் 3-வது இடத்தையும் பிடித்துள்ளது.
- இந்தியா 2018 ஆம் ஆண்டில் 2.73 டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற GDPஐ பதிவு செய்துள்ளது.
- தற்போதைய அரசு 2025 ஆம் ஆண்டிற்குள் 5 டிரில்லியன் டாலர் பொருளாதார நாடாக இந்தியாவை மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பொருளாதார வல்லுநர்களின்படி நாணய நிலைத் தன்மையின்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக் குறைவு ஆகியவை காரணமாக உலக GDP தரவரிசையில் இந்தியா 7-வது இடத்திற்குச் சென்றுள்ளது.




## சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (திருத்த) மசோதா, 2019

- சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (திருத்த) மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.
- இது சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் சட்டம், 2005ஐ திருத்துகின்றது.
- இதற்கு முந்தைய சட்டத்தின்படி, ஒரு நபர் என்ற வரையறையில் ஒரு தனிநபர், ஒரு

இந்து கூட்டுக் குடும்பம், ஒரு நிறுவனம், ஒரு கூட்டுறவு சமூகம், ஒரு தொழிற்சாலை, நபர்களின் கூட்டமைப்பு (சங்கம்) ஆகியவை உள்ளடங்கும்.

- இந்த மசோதாவானது இந்த வரையறையில் மேலும் 2 பிரிவுகளைச் சேர்த்துள்ளது. அவையாவன ஒரு அறக்கட்டளை மற்றும் மத்திய அரசினால் அறிவிக்கப்படும் எந்தவொரு இதர நிறுவனங்கள்.

### எஸ்பிஐ மற்றும் சீனாவின் பணவழங்கீட்டு அமைப்பு

- இந்திய பாரத ஸ்டேட் வங்கியின் ஷாங்காய் கிளையானது தற்பொழுது சீனாவின் தேசிய மேம்பட்ட பணவழங்கீட்டு அமைப்புடன் (China's National Advance Payment System - CNAPS) இணைக்கப்பட்டுள்ளது.
- உள்நாட்டு நாணயத்தில் வணிகம் செய்வதற்கு உரிமத்தைப் பெற்ற ஒரே இந்திய வங்கி பாரத ஸ்டேட் வங்கியாகும். மேலும் சீனாவின் மக்கள் வங்கியினால் CNAPSற்குள் இணைக்கப்பட்ட முதல் வங்கி இதுவாகும்.
- CNAPS ஆனது அனைத்து பணவழங்கீடுகளுக்கும் நிகழ்நேர தீர்வுச் சேவைகளை அளிப்பதற்காக சீனாவின் மக்கள் வங்கியினால் 2008 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### இந்திய இராணுவத்தில் மின்சார மகிழுந்துகள்

- இந்திய இராணுவமானது ஆற்றல் திறன் சேவை நிறுவனத்துடன் (EESL - Energy Efficiency Services Ltd) இணைந்து புது தில்லியில் தனது அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக மின்சார மகிழுந்துகளுடன் கூடிய ஒரு சுற்றுச்சூழல் முன்னெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- இந்த முன்னெடுப்பானது 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 அன்று அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது. அத்தினத்தன்று இந்திய இராணுவத்திற்காக முதன்முறையாக ஏராளமான மகிழுந்துகள் கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டன.
- EESL ஆனது ஒரு மிகப்பெரிய ஆற்றல் சேவை நிறுவனமாகும். இது மேம்படுத்தப்பட்ட எரிசக்தி திறனுக்கான தேசியத் திட்டத்தின் சந்தை தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றது.
- EESL என்பது 4 தேசிய பொதுத் துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும்.

| | |
|---|---|
| NTPC Limited | Power Finance Corporation Limited |
| Rural Electrification Corporation Limited | POWERGRID Corporation of India Limited |

## மாநிலச் செய்திகள்

### ஜம்மு காஷ்மீர் இடஒதுக்கீடு (திருத்த) மசோதா, 2019

- ஜம்மு காஷ்மீர் இடஒதுக்கீடு (திருத்த) மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு

அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.

- இந்த மசோதா 2004 ஆம் ஆண்டின் ஜம்மு காஷ்மீர் இடஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துகின்றது. இது 2019 ஆம் ஆண்டு மார்ச் 01 அன்று நடைமுறைக்கு வந்த அவசரச் சட்டத்தை மாற்றுகின்றது.
- இந்த மசோதாவானது சர்வதேச எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் சமூக மற்றும் கல்வி ரீதியில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு மாநில அரசின் சில பதவிகளுக்கான நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளுக்கான இட ஒதுக்கீட்டை நீட்டித்துள்ளது.
- இதற்கு முன்பு உண்மைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுமே இடஒதுக்கீட்டுக்குத் தகுதியுடையவர்களாக இருந்தனர்.
- 2004 ஆம் ஆண்டு சட்டத்தில், உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழ்ந்து, அவர்கள் 3 லட்சத்திற்கும் மேல் வருமானம் ஈட்டினால் அவர்கள் இடஒதுக்கீட்டிற்குத் தகுதியற்றவர்களாவர்.
- மேலும் இந்தத் திருத்தமானது சர்வதேச எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்களுக்கும் விதிமுறையை நீட்டித்துள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ரவீஷ் குமார் மகசேசே விருது

- என்டிடிவியைச் (NDTV) சேர்ந்த பத்திரிக்கையாளரான ரவீஷ் குமார் 2019 ஆம் ஆண்டின் ரமோன் மகசேசே விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- “குரலற்றவர்களுக்காக குரலைக் கொடுப்பதற்குப் பத்திரிக்கையைப் பயன்படுத்தியதற்காகவும்” மிக உயரிய தரமுள்ள அறம் சார்ந்த பத்திரிக்கைத் துறை மற்றும் பத்திரிக்கைத் துறைக்கு அயராது பாடுபட்டதற்காகவும் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- மகசேசே விருது என்பது ஆசியாவைச் சேர்ந்த தனிப்பட்ட நபர்களுக்கும் அமைப்புகளுக்கும் வழங்கப்படும் மிக உயரிய கௌரவ விருதாகும். இது பெரும்பாலும் நோபல் பரிசின் ஆசியப் பதிப்பு என்று அழைக்கப்படுகின்றது.
- இந்த விருதை வெற்ற மற்ற வெற்றியாளர்கள்




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★